**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 36/2021 |
| Name | : | Balakrishnan |
| P.W. | : | 6 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**24.02.2026**

**எதிரிகள் 1 முதல் 4 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணியூர் காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 22.03.2021 அன்று மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது மடத்துக்குளம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த செல்வன் மகன் இளவரசன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 86/2021 இதச பிரிவுகள் 341, 294(பி), 324, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் மற்றும் புகாரை இணைத்து நீதிமன்றத்திற்கும் அதன் ஒரு நகலை மேல் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள்  தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) 22ம் தேதி இரவு 10.45 மணியளவில் எனக்கு தகவல் கிடைத்தது. அ.சா.1 யிடம் சுமார் 11.15 மணியளவில் புகார் வாக்குமூலம் பெற்றேன். புகார் வாக்குமூலம் பதிவு செய்த போது அ.சா.1 உடன் யார் இருந்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அ.சா.1 தனது புகாரில் கண்ணுற்ற சாட்சிகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல அவரது தம்பி டேவிட் என்பவர் சம்பவ இடத்தில் இருந்ததாக சொல்லியுள்ளார். எதிரிகள் மீது கொடுத்த பொய்யான புகாரின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.02.24 14:49:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்